

தலைமைச் செயலகத்தில், நேற்று (18.07.2025) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் 2025–2026 செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், சர்க்கரைத் துறை இயக்குநர் த.அன்பழகன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நேற்று (18.07.2025) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு133, தியாகராயர் நகர், பிரகாசம் சாலையில் இன்று முதல் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வுக் கூடத்தினைப் (Gig Workers Lounge) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கிருந்த தற்சார்புத் தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார். இந்த ஆய்வின்போது, மேயர் ஆர், பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர்கள் சேர்க்கை! எழும்பூர் வடக்கு பகுதி

# 77,77அ,78,78அ ஆகிய வட்டத்தில் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆலோசனை வழங்கினார்!

சென்னை,ஜூலை.19

மதுரை மாநகரில் ஜூன் 1 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளுக்காக

எழும்பூர் வடக்கு பகுதி 77,77அ,78,78அ ஆகிய வட்டத்தின் பி எல் ஏ 2, பி டி ஏ, பி ஒய் ஏ மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று 18.7.2025 மாலை 6,00, மணியளவில் சென்னை , குயப்பேட்டை அறிஞர் அண்ணா மாளிகை



யில் நடைபெற்ற கூட்டத் தில் இந்து சமய அறநிலை

யத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், எழும்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் சொ.வேலு, தொகுதி பார்வையாளர் பி எம் யாழினி , கோ ஏகப்பன்,தமிழன் பிரசன்னா , பரிதி இளம் சுருதி வட்டக் கழக செயலாளர் தி.தயாளன்,வி.அபாய்,சு. மனோகர்,ந.பாலுவி. மற்றும் பி எல் ஏ 2, பிடிஏ ,பி ஒய் ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெரம்பூர் - ஆர்.கே.நகர் தொகுதிகளில் ரூ.6 கோடியே 70 லட்சம் செலவில்

# அங்கன்வாடி - சமூக நலக்கூடம் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகள்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அடிக்கல் நாட்டுகிறார்!

சென்னை, ஜூலை 19-

வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி முயற்சியால் வடசென்னை தொகுதியில் இதுவரை 7 கோடியே 67 லட்சங்கள் மதிப்பீட்டில் 21 அங்கன்வாடிகள் கட்டப்பட்டு தற்போது இயங்கி வருகின்றன, மேலும் ரூபாய் 11 கோடியே 9 லட்சங்கள் மதிப்பீட்டில் 5 சமூக நலக் கூடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப் பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினர் முன்னெடுப்பில் பெரம்பூர் மற்றும் ஆர்.கே. நகர் தொகுதிகளில் ரூபாய். 6 கோடியே 70 லட்சங்கள் செலவில் அங்கன்வாடி, சமூக நலக்கூடம், உள்ளிட்ட மக்கள் நலப் பணிக்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி இன்று (19.07.2025) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

நிகழ்ச்சியின் விவரங்கள்!

1. காலை 10.30 மணிக்கு பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி வார்டு - 35க்கு உட்பட்ட முத்தமிழ் நகர் (பிளாக் 2,3,4,7) ஆகிய இடங்களில் சமூக பொறுப்பு நிதி (CSR) மூலம் ரூபாய் 1 கோடியே 32 லட்சங்கள் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்.

2. காலை 10.45 மணிக்கு பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி வார்டு 45க்கு உட்பட்ட கணேசபுரம் பகுதியில் சமூக பொறுப்பு நிதி மூலம் ரூபாய். 2 கோடி மதிப்பீட்டில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்.

3. காலை 11.15 மணிக்கு ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி வார்டு 40க்கு உட்பட்ட அம்மணி அம்மாள் தோட்டம் 2 மற்றும் 4வது தெருக்களில் சமூக பொறுப்பு நிதி (CSR) மூலம் ரூபாய் 1 கோடியே 60லட்சங்கள் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை மற்றும் அங்கன்வாடி கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டுதல்.

4. காலை 11:30 மணிக்கு ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி வார்டு 38க்கு உட்பட்ட கருணாநிதி நகரில் சமூக பொறுப்பு நிதி (CSR) மூலம் ரூபாய் 1 கோடியே 79லட்சங்கள் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., சட்ட மன்ற உறுப்பினர் ஜே. ஜே.எபினேசர்., பகுதிக் கழகச் செயலாளர்கள் க. ஜெயராமன், அ.முருகன், இரா. லட்சுமணன், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி கணேசன் எம்.சி., வட்டக் கழகச் செயலாளர்கள் அரிதாஸ், உமாபதி, மாரிமுத்து, தினகரன், நாகராஜ், கோதண்டம், சுந்தர் மாமன்ற உறுப்பினர்கள் ஜீவன், சேகுவேரா, திருமதி. குமாரி நாகராஜ், மற்றும் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

தொழில்முனைவோர் - சொந்தமாக

# “வலையொளி” (யூ டியூப்) சேனல் உருவாக்கும் பயிற்சி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 19-

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம். சென்னையில் சொந்தமாக “வலையொளி” (யூ டியூப்) சேனலை உருவாக்குதல்’ என்ற தலைப்பில் மூன்று நாள் பயிற்சி முகாம் 29.07.2025 முதல் 31.07.2025 வரை, காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நிறுவனம் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சியில் பங்கேற்பவர்கள் கற்றுக்கொள்ளப்போவது:

- “வலையொளி” (யூடியூப்) சேனல் உருவாக்கம்
- வீடியோ மற்றும் ஸ்லைட்ஷோ தயாரிப்பு
- சமூக ஊடகங்களை இணைக்கும் நுட்பங்கள்
- வாடிக்கையாளர் வலையமைப்பை விரிவுபடுத்தும் முறைகள்
- பயனுள்ள ஆன்லைன் சந்தைப்படுத்தல், ஊக்குவிப்பு
- டொமைன் பெயர் பதிவு மற்றும் ஹோஸ்டிங்
- இணையதள வடிவமைப்பு மற்றும் அதன் தொழில்நுட்பங்கள்
- இவற்றுடன் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் (ஆண் / பெண்/ திருநங்கைகள்) 18 வயதிற்கு மேற்பட்ட, குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 10ம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். பயிற்சியில் பங்குப் பெறும் ஆண் / பெண்/ திருநங்கைகள் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக குறைந்த கட்டண வாடகையில் தங்கும் விடுதி உள்ளது. தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து முன் பதிவு செய்து கொள்ளலாம்.

பங்கேற்கும் பயிற்சியாளர்களுக்காக, குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதியும் நிறுவனம் வழங்குகிறது. தங்கும் வசதி விரும்புவோர், முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் தகவல்களுக்காக, www.editn.in என்ற இணையதளத்தை பார்வையிடலாம். திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சி முடிவில் அரசு சான்றிதழும் வழங்கப்படும்.

முன்பதிவு அவசியம்.

தகவல் தொடர்புக்கு: 9543773337 / 93602 21280.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிடப்ப ட்டுள்ளது.

மண்–மொழி– மானம் காக்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர்கள் சேர்க்கை!

# துறைமுகம் கிழக்கு - மேற்குப் பகுதிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை,ஜூலை 19-

மதுரை மாநகரில் ஜூன் 1 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை பணிகளுக்காக இன்று (19.7.2025) மதியம் 12.00 மணியளவில் துறைமுகம் மேற்கு பகுதி ஆலோசனைக் கூட்டம் ஸ்ரீ ஹாய்மா மாதாஜி டெம்பிள் 112,தங்கசாலை தெரு சென்னை.1 என்ற முகவரியிலும்,

துறைமுகம் கிழக்கு பகுதி ஆலோசனைக் கூட்டம் மதியம் 12.30 மணியளவில் அன்னை தெரசா பார்ட்டி ஹால் (உடையார் மேன்சன்) A/c ஆச்சாரப்பன் தெரு கோழி மார்கெட் அருகிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் துறைமுகம் கிழக்கு - மேற்குப் பகுதிகளுக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர், பகுதி கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாக நிலை முகவர்கள் (BLA 2), பாக சமூக வலைதள முகவர்கள் (BDA), பாக இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள் (BYO) ஆகியோர் அந்தந்த பகுதிகளில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
**செயலாளர்**
**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.**



ஆலந்தூரில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிய பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் பங்கேற்று கழக உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்தும் படி அறிவுறுத்தினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் து.மூர்த்தி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை இதழியல் நிறுவனத்தின்

# தலைமை இயக்குநராக ஏ.எஸ்.பன்னீர்செல்வம்- நிர்வாகக் குழுத் தலைவராக என்.ரவி நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதழியல் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, ஊடகக் கல்வியை வழங்குவதற்காகவும், இதழியலைத் தொழிலாக தொடங்க விரும்பும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கு குறைந்த கட்டணத்தில் முதுநிலை பட்டயப் படிப்பினை (Post Graduate Diploma Course) வழங்குவதற்காகவும் தமிழ்நாடு அரசு சார்பில் “சென்னை இதழியல் நிறுவனத்தை” தொடங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, சென்னை இதழியல் கல்வி நிறுவனம் 2025-2026 ஆம் கல்வியாண்டு முதல் சென்னையில் தொடங்கப்படும். இதற்காக, ரூ.775 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சென்னை இதழியல் நிறுவனமானது, நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 8 (1) இன் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை இதழியல் நிறுவனத்தில் (Chennai Institute of Journalism) இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பினை (Post Graduate Diploma of Journalism) இக்கல்வியாண்டு முதல் (2025 - 2026) தொடங்குவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

சென்னை இதழியல் நிறுவனத்தின் நிருவாகக் குழுத் தலைவராக, “தி இந்து” குழுமத்தின் இயக்குநர் (ம) “தி இந்து” நாளிதழின் முன்னாள் தலைமை ஆசிரியர் என். ரவி அவர்களும் தலைமை இயக்குநராக “தி இந்து” நாளிதழின் முன்னாள் ஆசிரியர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டம்

# கபிலர்மலை வடக்கு, கபிலர்மலை மத்திய, கபிலர்மலை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், கபிலர்மலை ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கே.சண்முகம் அவர்கள், சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கபிலர்மலை ஒன்றியத்தை, **சுபிலர்மலை வடக்கு, சுபிலர்மலை மத்திய. கபிலர்மலை தெற்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றியப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **கபிலர்மலை வடக்கு, சுபிலர்மலை மத்திய, சுபிலர்மலை தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**கபிலர்மலை வடக்கு ஒன்றியம் :** 1.குப்பிரிக்காபாளையம், 2.பெருங்குறிச்சி, 3.கள்ளிபாளையம், 4.சோழசிராமணி, 5.ஜமீன்எளம்பள்ளி, 6.குரும்பலமகாதேவி, 7.கொத்தமங்கலம் ஆகிய 7 ஊராட்சிகள்.

**கபிலர்மலை மத்திய ஒன்றியம் :** 1.திடுமல், 2.தி.கவுண்டம்பாளையம், 3.சிறுநல்லிகோவில், 4.சுபிலக்குறிச்சி, 5.பெரியசோளிபாளையம், 6.வடகரையாத்தார் ஆகிய 6 ஊராட்சிகள்

**கபிலர்மலை தெற்கு ஒன்றியம் :** 1. இருக்கூர், 2.ஆனங்கூர், 3.குன்னத்தூர், 4.பிலிக்கல்பாளையம், 5.சேளூர், 6.கொந்தாளம், 7.கோப்பனம்பாளையம் ஆகிய 7 ஊராட்சிகள்

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **கபிலர்மலை வடக்கு, கபிலர்மலை மத்திய, கபிலர்மலை தெற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சுபிலர்மலை வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர்: **எம்.சுப்பிரமணியம்,** தளபதி உணவகம், மெயின் ரோடு, சோழசிராமணி & அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

**சுபிலர்மலை மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர்: **டி.எம்.சரவணக்குமார்,** தண்ணீர்பந்தல், பெரியசோளிபாளையம் அஞ்சல், கபிலர்மலை, பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்

**கபிலர்மலை தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர்: **பி.பி.சாமிநாதன்,** இருக்கூர் & அஞ்சல், கபிலர்மலை, பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 18.07.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.




சென்னைத் தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று (18.07.2025) வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, தொகுதி பார்வையாளர் சந்திரபாபு, மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், பாலவாக்கம் தா. விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், வெங்கடேசன், எம்.கே. ஏழுமலை, மேடவாக்கம் பா.ரவி, எஸ்.ஏ.ஹரி கிருஷ்ணன், தா.பஷீர், சமீனா செல்வம், ரத்னா லோகேஸ்வரன், பா.அருண்குமார், கொட்டிவாக்கம், த.பார்த்திபன், மணிகண்டன் நாடிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.